2nd REVISION

# பி.ஏ.கே.பழனிசாமி மேல்நிலைப் பள்ளி

## முன் திருப்புதல் தேர்வு – II

## தமிழ்

நேரம் : 3 மணி — மதிப்பெண்: 100

வகுப்பு : X

பகுதி - I — 15X1=15

I. அனைத்து வினாக்களுக்கும் விடைதருக

1. 'உனதருளே பார்ப்பன் அடியேனே' – யாரிடம் யார் கூறியது?
   அ) குலசேகராழ்வாரிடம் இறைவன் ஆ) இறைவனிடம் குலசேகராழ்வார்
   இ) மருத்துவரிடம் நோயாளி ஈ) நோயாளியிடம் மருத்துவர்

2. "அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
   மருளை அகற்றி மதிக்கும் தெருளை" – என்று இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
   அ) தமிழ் ஆ) அறிவியல் இ) கல்வி ஈ) இலக்கியம்

3. குளிர் காலத்தைப் பொழுதாகக் கொண்ட நிலங்கள் -----
   அ) முல்லை , குறிஞ்சி ,மருதநிலங்கள் ஆ) குறிஞ்சி, பாலை, நெய்தல் நிலங்கள்
   இ) குறிஞ்சி ,மருதம் ,நெய்தல் நிலங்கள் ஈ) மருதம் நெய்தல் , பாலை நிலங்கள்

4. கோசலநாட்டில் கொடை இல்லாத காரணம் என்ன?
   அ) நல்ல உள்ளம் உடையவர்கள் இல்லாததால் ஆ) ஊரில் விளைச்சல் இல்லாததால்
   இ) அரசன் கொடுங்கோல் ஆட்சி புரிவதால் ஈ) அங்கு வறுமை இல்லாததால்

5. அருந்துணை என்பதைப் பிரித்தால் --------
   அ) அருமை + துணை ஆ) அரு + துணை
   இ) அருமை + இணை ஈ) அரு + துணை

6. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது ------ வினா. "அதோ , அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது ----- விடை
   அ) ஐயவினா ,வினா எதிர்வினாதல் ஆ) அறிவினா , மறைவிடை
   இ) அறியாவினா , சுட்டு விடை ஈ) கொளல் வினா ,இனமொழி விடை

7. "என் அம்மை வந்தாள்" என்று மாட்டைப் பார்த்துக் கூறுவது ----- ஆகும்
   அ) திணை வழுவமைதி ஆ) பால் வழுவமைதி
   இ) கால வழுவமைதி ஈ) இட வழுவமைதி

8. 'சதாவதானி' என்று புகழப்பட்டவர் ---------
   அ) செய்குதம்பிப்பாவலர் ஆ) கம்பர் இ) குலசேகராழ்வார் ஈ) பாரதியார்

9. காடும் காடு சார்ந்த இடமும் ----- எனப்படும்
   அ) நெய்தல் ஆ) மருதம் இ) முல்லை ஈ) குறிஞ்சி

10. பாடலின் தொடக்கம்முதல் முடிவுவரை ஆற்றுநீரின் போக்கைப் போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைவது ------ ஆகும்.
    அ) ஆற்றுநீர்ப் பொருள்கோள் ஆ) நிரல் நிறைப் பொருள் இ) கொண்டு கூட்டுப் பொருள்கோள்
    ஈ) எதிர்நிரல் நிறைப்பொருள்கோள்

11. 'பாரதிதாசன் கவிதைகள் இருக்கிறதா' என்று நூலகரிடம் வினவுதல் -----------.
    அ) அறிவினா ஆ) அறியாவினா இ) ஐயவினா ஈ) கொளல்வினா

பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

வண்மையில்லை யோர்வறுமை யின்மையால்
திண்மையில்லை நேர்செறுந ரின்மையால்
உண்மையில்லை பொய்யுரை யிலாமையால்
வெண்மையில்லை பல்கேள்வி மேவலால்

12. இப்பாடல் இடம்பெற்றுள்ள நூல் -----
    அ) பெருமாள் திருமொழி ஆ) நீதி வெண்பா இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
13. இப்பாடலின் ஆசிரியர் ------
    அ) கம்பர் ஆ) குலசேகராழ்வார் இ) பாரதியார் இ) பாரதிதாசன்
14. வண்மை என்பதன் பொருள் -------
    அ) கொடை ஆ) வளமை இ) பொய்மை இ) வலிமை
15. பாடலில் இடம்பெற்றுள்ள அடி எதுகைச் சொற்கள்
    அ) வண்மை , வறுமை ஆ) உண்மை , பொய்யுரை இ) திண்மை, செறுநரின்மை இ) வண்மை , திண்மை

4x2=8

**II. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி :**

16. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

17. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.

அ) இலக்கணமுறையின்றிப் பேசுவதும் எழுதுவதும் வழு எனப்படும்.
ஆ) கம்பர், இராமனது வரலாற்றைத் தமிழில் வழங்கி "இராமவதாரம்" எனப் பெயரிட்டார்.

18) சதாவதானம் என்றால் என்ன?

19) செங்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.

20) உறங்குகின்ற கும்பகன்ன "எழுந்திராய் எழுந்திராய்" காலதூதர் கையிலே 'உறங்குவாய் உறங்குவாய்' கும்பகன்னனை என்ன சொல்லி எழுப்புகிறார்கள்? எங்கு அவனை உறங்கச் சொல்கிறார்கள்?

21) 'செயற்கை' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

**பிரிவு - 2**

5x2=10 .

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடையளி :**

22. காட்டில் விளைந்த வரகில் சமைத்த உணவு மழைக்கால மாலையில் சூடாக உண்ணச் சுவை மிகுந்திருக்கும். இத்தொடரில் அமைந்துள்ள முதற்பொருள் , கருப்பொருள்களை வகைப்படுத்தி எழுதுக.

23. தொடரில் விடுபட்ட வண்ணங்களை உங்களின் எண்ணங்களால் நிரப்புக.
அ) அனைவரின் பாராட்டுகளால் வெட்கத்தில் பாடகரின் முகம் ---------
ஆ) ---- மனம் உள்ளவரை அப்பாவி என்கிறோம்.

24. இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின் விளக்கின் சொடுக்கி எந்தப் பக்கம் இருக்கிறது? இதோ இருக்கிறதே! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? மேற்கண்ட உரையாடலில் வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.

25. கொடுக்கப்பட்டுள்ள இருசொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.
அ) இயற்கை – செயற்கை　　　ஆ) சிறு – சீறு

26) தொடரைப் படித்து விடையை எழுதுக. (கரு , சோறு, கற்றல்)

அ) நூலின் பயன் <u>படித்தல்</u> எனில் கல்வியின் பயன் ---------
ஆ) விதைக்குத் தேவை <u>எரு</u> எனில் கதைக்குத் தேவை ______

27) அமர்ந்தான் - பகுபத உறுப்பிலக்கணம் தருக.

28) கலைச்சொற்கள் தருக.
**a) Biotechnology**　　　**b) Emblem**

**பகுதி – 3**

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**　　　**2x3=6**

29. அடைப்புக் குறிக்குள் உள்ளவாறு மாற்றுக,
அ) தந்தை "மகனே! நாளை உன்னுடைய தோழன் அழகனை அழைத்து வா" என்று சொன்னார்
(ஆண்பாற் பெயர்களைப் பெண்பாலாக மாற்றித் தொடரை எழுதுக)

ஆ) அக்கா நேற்று வீட்டுக்கு வந்தது. அக்கா புறப்படும்போது அம்மா வழியனுப்பியது.
(வழுவை வழா நிலையாக மாற்றுக)

இ) "இதோ முடித்து விடுவேன்" என்று செயலை முடிக்கும் முன்பே கூறினார்
(வழா நிலையை வழுவமைதியாக மாற்று)

**30.** பத்தியைப் படித்து பதில் தருக.

பருப்பொருள்கள் சிதறும்படியாகப் பல ஊழிக்காலங்கள் கடந்து சென்றன. புவி உருவானபோது நெருப்புப் பந்து போல் விளங்கிய ஊழிக்காலம் தோன்றியது. பின்னர்ப் புவி குளிரும்படியாகத் தொடர்ந்து மழை பொழிந்த ஊழிக் காலம் கடந்தது. அவ்வாறு தொடர்ந்து பெய்த மழையால் புவி வெள்ளத்தில் மூழ்கியது. இப்படி மீண்டும் மீண்டும் சிறப்பாகிய ஆற்றல் மிகுந்து செறிந்து திரண்டு இப்படியாக (வெள்ளத்தில் மூழ்குதல்) நடந்த இந்தப் பெரிய உலகத்தில் , உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற சூழலாகிய உள்ளீடு தோன்றியது. உயிர்கள் தோன்றி நிலைபெறும்படியாக இப்பெரிய புவியில் ஊழிக்காலம் கடந்தது.

அ) பத்தியில் உள்ள அடுக்குத்தொடர்களை எடுத்து எழுதுக.
ஆ) புவி ஏன் வெள்ளத்தில் மூழ்கியது?
இ) பெய்தமழை - இத்தொடரை வினைத் தொகையாக மாற்றுக.

31. உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?

பிரிவு - 2 2x3=6

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் 34 கட்டாய வினா.

32. பின்வருவனவற்றுள் கூரான ஆயுதம் எது என்ன செந்நாப்போதார் கூறுகிறார்? ஏன்?
பெரியகத்தி , இரும்புஈட்டி , உழைத்ததால் கிடைத்த ஊதியம், வில்லும் அம்பும்.

33. “மாளாத காதல் நோயாளன் போல்” என்னும் தொடரிலுள்ள உவமை சுட்டும் செய்தியை விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.
“வாளால் அறுத்துச்” எனத் தொடங்கும் பெருமாள் திருமொழி பாடல்

(அல்லது)

“வெய்யோனொளி” எனத் தொடங்கும் கம்பராமாயணப் பாடல்

பிரிவு - 3 2x3=6

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.

35. பொருளல் லவரைப் பொருளாகச் செய்யும்
பொருளல்ல தில்லை பொருள்
இக்குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

36. நேற்றிரவு பெய்த மழை எல்லாம் தொட்டியை நிறைத்திருந்தது. வாழைத் தோப்பில் குட்டியுடன் நின்றிருந்த மாடு கத்தியது ; தந்தை என்னிடம் ,“இலட்சுமி கூப்பிடுகிறாள் , போய்ப்பார்” என்றார். “இதோ சென்று விட்டேன்” என்றவாறே அங்குச் சென்றேன். துள்ளிய குட்டியைத் தடவிக்கொடுத்து, “என்னடா விளையாட வேண்டுமா? என்று கேட்டேன். என் தங்கையும் அங்கே வந்தாள். அவளிடம், “நீயும் இவனும் விளையாடுங்கள்” என்று கூறினேன். அவிழ்த்துவிடப்பட்ட இலட்சுமி தொட்டியிலிருது நீரைக் குடித்தாள்
இப்பத்தியிலுள்ள வழுவமைதிகளைப் பட்டியலிட்டு எழுதுக.

37. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்
இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

பகுதி 4 5x5=25

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்

38. அ) கல்வியை எதனால் போற்றிக் கற்க வேண்டும் என நீதிவெண்பா கூறுகிறது?

(அல்லது)


ஆ) வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள் வழி விளக்குக.

39.அ) “பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்” - செயல் திட்ட வரைவு ஒன்றை உருவாக்கி அதனைச் செயல்படுத்த தலைமை ஆசிரியருக்குக் கடிதம் எழுதுக.

(அல்லது)

ஆ) உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியறைக் கவினுற எழுதுக



41. கொடுக்கப்பட்டுள்ள நூலக உறுப்பினர் படிவத்தினைப் பூர்த்தி செய்க.

42. பள்ளியல் நான் வீட்டில் நான் என்னும் தலைப்புகளில் நீங்கள் பள்ளியிலும் வீட்டிலும் நடந்து கொள்ளும் முறைகளை ஐந்தினைப் பட்டியலிடுக.

(அல்லது)

ஆ. மொழிப்பெயர்க்க

Malar : Devi , Switch off the lights when you leave the room.
Devi : Yeah, We have to save electricity.
Malar : Our nation spends a lot of electricity for lighting up our streets in the night
Devi : Who knows? In future our country may launch artificial moons to light our night time sky!
Malar : I have read some other countries are going to launch these types of illumination satellites near future.
Devi : Superb news! If we launch artificial moons, they can assist in disaster relief by beaming light on areas that last power!.

பகுதி – IV

3x8=24

அனைத்து வினாக்களுக்கு விடையளி

43) அ) நெகிழிப் பைகளின் தீமையைக் கூறும் பொம்மலாட்டம் உங்கள் பள்ளியின் ஆண்டு விழாவில் நிகழ்த்தப்படுகிறது அதற்குப் பாராட்டுரை ஒன்றினை எழுதுக.

(அல்லது)

ஆ) சந்தக் கவிதையில் சிறக்கும் கம்பன் என்ற தலைப்பில் இலக்கிய உரை எழுதுக. அன்பும் பண்பும் கொண்ட தலைவர் அவர்களே'! தேர்ந்தெடுத்த பூக்களைப் போன்று வரிசை தொடுத்து அமர்ந்திருக்கும் ஆன்றோர்களே! அறிஞர் பெருமக்களே! வணக்கம். இயற்கை கொலு வீற்றிருக்கும் காட்சியைப் பெரிய கலைநிகழ்வே நடப்பதான தோற்றமாகக் கம்பன் காட்டும் கவி .... தண்டலை மயில்கள் ஆட .... இவ்வுரையைத் தொடர்க.

44) நயம் பாராட்டுக.

அ) நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்ப்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறிபடைத்தோம் ;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம் ;
பலாவின் கனிச்சுளை வண்டியில் ஓர் வண்டு
பாடுவதும் வியப்போ?

\- பாரதியார்

(அல்லது)

ஆ) பள்ளி ஆண்டுவிழா மலருக்காக நீங்கள் நூலகத்தில் படித்த கதை! கட்டுரை / சிறுகதை கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.
குறிப்பு – நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் - மொழி நடை – வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் - நூல் கட்டமைப்பு – சிறப்புக் கூறு – நூல் ஆசிரியர்.

45. 'விண்வெளியும் கல்பனா சாவ்லாவும்' என்னும் தலைப்பில் கட்டுரை எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் நடைபெற்ற அரசுப் பொருட்காட்சிக்குச் சென்று வந்த நிகழ்வை கட்டுரையாக்குக.

******